தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2022
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**The Tamil Competition 2022**
**The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.**

இணைப்பு: 17

## பேச்சுப் போட்டி - மத்திய பிரிவு

(பிறந்த திகதி: 01.07.2012 - 30.06.2014).

நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

# எதிர் கொண்டு வெல்வோம்!

“வாழ்வென்றால் போராடும் போர்க்களமே” என்ற பாடல் சொல்வதைப் போல் பிரச்சனைகள் இல்லாத வாழ்க்கையே இல்லை. அவற்றைப் போராடி வெல்லும் உறுதி எமக்கு வேண்டும்.

போட்டிகளிலும், பரீட்சைகளிலும் நாம் எதிர்பார்க்கும் வெற்றி, எப்போதுமே கிடைத்து விடுவதில்லை. மாற்றங்களாலும், இயற்கை இடர்களாலும் கூடச் சவால்கள் வரக்கூடும். அவை எவையும் நிரந்தரமல்ல. சவால்களைச் சந்திக்கையில், எமது திறமைகள் வெளிவருகின்றன. புதிய கண்டுபிடிப்புகள் உருவாகின்றன. கொரோனா என்ற தொற்று நோய், எம்மை முடக்கி வைத்தது. நாம் அஞ்சி நின்றோமா? சவால்களைச் சந்திக்க மருத்துவமும் தொழில்நுட்பமும் கை கொடுத்தன. இன்று நம் அன்றாட வாழ்க்கைக்கு மீண்டு வருகிறோம் இல்லையா?

தீர்வுகளை நோக்கி புதிய முயற்சிகளைச் செய்வோம். வீணான பேச்சுக்களைப் புறம் தள்ளுவோம். வருமுன் காத்திட வழி செய்வோம். சோர்ந்து போகாமல், எதற்கும் துணிந்து நிற்போம். எம்மால் எதுவும் முடியும் என்ற நம்பிக்கை கொள்வோம். இலட்சியம் மட்டுமே, எம் இலக்காக இருக்க வேண்டும். அப்போதுதான் வெற்றி எம் வசமாகும்.

தடைகளைத் தகர்ப்போம். எதிர்கொண்டு வெல்வோம்.

நன்றி, வணக்கம்.